தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை இராணி மேரி கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திருமதி ஆ.அமிர்தகௌரி சந்தித்து பேசினார். உடன் அவரது கணவர் பேராசிரியர் மா.செல்வராசன், இங்கிலாந்தில் பணியாற்றும் அவரது மகள் மருத்துவர் செ.வண்ணமலர், அவரது மரு மகன் மருத்துவர் சு.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டி.பி.எம். மைதீன்கான், அண்மையில் திருமணமான தனது பேத்தி அஃப்சான் நபோரா – ஜவஹர் அலி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

224 பயனாளிகளுக்கு ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்கள்!

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார்!

திருப்பூர், மார்ச் 7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தாராபுரத்தில் வருவாய்த்துறையின் சார்பில் 224 பயனாளிகளுக்கு ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சிவரஞ்சினி திருமண மண்டபத்தில் 05.03.2024 செவ்வாய்க்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் 224 பயனாளிகளுக்கு ரூ.4,89,08,160/ மதிப்பீட்டில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் வழங்கினார் : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து அதிகமாக பட்டாக்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டப் பொறுப்பாளர்களை வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம் மூலம் படித்த இளைஞர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு 35 சதவீதம் அரசு மானியமாகவும், 65 சதவீதம் முதலீடாவும் தொழில் தொடங்கலாம். மேலும் குறு, சிறு, நடுத்தர தொழில் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படித்த இளைஞர்கள் கட்டாயம் தொழில் தொடங்க முயற்சி செய்ய வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுப்பதாக அறிவித்துள்ளார்கள். ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வீடு இல்லாதவர்கள் பதிவு செய்து பயன் பெறலாம். 2023-24 நிதியாண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும். பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களில் 224 நபர்களுக்கு முதல் கட்டமாக இன்றைய தினம் விலையில்லா வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தாராபுரம் நகர கழக செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் எஸ்.முருகானந்தம், தாராபுரம் நகர் மன்றத்தலைவர், பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன் உள்பட மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் நகரக் கழகம் சார்பில்

முதல்வர் பிறந்த நாள் விழா- நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

நெல்லிக்குப்பம் புகழேந்தி - மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் சிறப்புரை!

பெரம்பலூர், மார்ச்.7-

பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் "எல்லோருக்கும் எல்லாம்' திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

நகர அவைத்தலைவர் கோ.ரெங்கராஜ் தலைமை வகித்தார்.

மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக் வரவேற்புரையாற்றினார்.

நகர துணைச் செயலாளர்கள் ஆர்.ரெங்கநாதன், கல்பனா முத்துகுமார், நகர பொருளாளர் முகமது அசாருதீன், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஆர்.ராஜேந்திரன், க.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியத்தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி,

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

நெல்லிக்குப்பம் புகழேந்தி பேசுகையில், மகளிர் உரிமைத் தொகை, மகளிர் இலவச பேருந்து பயணம், அரசுக் கல்லூரி மாணவிகளுக்கு உதவித்தொகை உள்ளிட்ட

தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களைப்பற்றி விளக்கி பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், பொதுக் குழு உறுப்பினர் எஸ். அண்ணாதுரை,

பேரூர் செயலாளர்கள் மு.வெங்கடேசன், செல்வலெட்சுமி சேகர், ஆர்.இரவிச்சந்திரன்,

ஏ.எஸ்.ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் அ. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால்,

மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி.ரவி, மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராசு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன்,

மா.பிரபாகரன், இரா. அருண், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், தலைமை கழக பேச்சாளர் எசனை. ஆறுமுகம், மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன்,

ஒன்றிய பெருந்தலைவர்கள் மீனா அண்ணாதுரை, க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை, சாந்தாதேவி குமார், எம்.ரெங்கராஜ், சங்கீதா ரமேஷ், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், வள்ளியம்மை ரவிச்சந்திரன், கீதா துரைராஜ், சரண்யா குமரன், டி.கே.ராமச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அ.அப்துல்கரீம் நன்றி உரையாற்றினார்.